பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 709 **நாள்: 23.11.2026**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து சாலைகள் மற்றும் பொது இடங்களில் முறையான உரிமம் இன்றி அமைக்கப்பட்ட விளம்பரப் பலகைகள், அனுமதிக்கப்பட்ட அளவீடுகளுக்கு மாறாக உள்ளவை மற்றும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு அமைக்கப்படாத விளம்பரப் பலகைகளைக் கண்டறிந்து அகற்றும் பணி 24.11.2026 மற்றும் 25.11.2026 ஆகிய இரண்டு நாட்களுக்கு தீவிரப் பணியாக மேற்கொள்ளப்படவுள்ளது.

மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களில் உள்ள 200 வார்டுகளிலும், அனுமதியற்ற விளம்பரப் பலகைகளைக் கண்டறிந்து அகற்றும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 200 வார்டுகளிலும் அனைத்து சாலைகள் மற்றும் பொது இடங்களில் முறையான உரிமம் இன்றி அமைக்கப்பட்ட விளம்பரப் பலகைகள், அனுமதிக்கப்பட்ட அளவீடுகளுக்கு மாறாக உள்ளவை மற்றும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு அமைக்கப்படாத விளம்பரப் பலகைகளை கண்டறிந்து அகற்றும் பணி 24.11.2026 மற்றும் 25.11.2026 ஆகிய இரண்டு நாட்களுக்கு தீவிரப் பணியாக காலை 7 மணி முதல் மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்பணிகளில் வார்டு வாரியாகவும், மண்டல அளவிலும், வட்டார அளவிலும் மேற்கொள்ளப்பட்ட பணிகளை கண்காணிக்க பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

விளம்பரதாரர்கள், விளம்பர முகமைகள் மற்றும் பிற தொடர்புடைய தரப்பினர், மாநகராட்சியிடமிருந்து உரிய உரிமம் பெற்ற பின்னரே, நிர்ணயிக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டு விளம்பரப் பலகைகளை அமைக்க வேண்டும். உரிமத்திற்காக விண்ணப்பம் மட்டும் சமர்ப்பிக்கப்பட்டு, இன்னும் உரிமம் வழங்கப்படாத விளம்பரப் பலகைகளும் அனுமதியற்றவையாகவே கருதப்பட்டு அவை அகற்றப்படும்.

எனவே, சம்பந்தப்பட்ட அனைவரும் தங்கள் விளம்பரப் பலகைகளுக்கான உரிமங்களின் செல்லுபடியாகும் தன்மையைச் சரிபார்த்து, அவை உரிய விதிகளுக்கு உட்பட்டு இருப்பதை உறுதிசெய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மாநகராட்சியின் சட்ட நடவடிக்கைகளைத் தவிர்க்க, விளம்பரதாரர்களும், முகமைகளும் அனுமதியற்ற விளம்பரப் பலகைகளைத் தாமாகவே முன்வந்து அகற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அனுமதியற்ற விளம்பரங்களைக் கட்டுப்படுத்தவும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், சென்னையின் அழகைப் பேணவும் மாநகராட்சியின் சார்பில் மேற்கொள்ளப்படும் இந்த முயற்சிக்கு, பொதுமக்களும் அனைத்துத் தரப்பினரும் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி

Greater Chennai Corporation
Press Release

PR.No. 708 **Date: 23.11.2026**

An intensive drive will be conducted on November 24, 2026, and November 25, 2026, to identify and remove advertisement boards within the Greater Chennai Corporation limits that have been installed without proper licenses, do not adhere to permitted dimensions, or otherwise fail to comply with existing regulations.

The Greater Chennai Corporation is actively engaged in identifying and removing unauthorized hoardings and advertisements across all 200 wards within its 15 zones.

As part of this ongoing effort, an intensive drive will be conducted on November 24, 2026, and November 25, 2026, starting at 7:00 AM. During this period, the Corporation will identify and remove all hoardings and advertisements—whether on roads or in public spaces—that lack a valid license, exceed permitted dimensions, or otherwise fail to comply with existing regulations.

For these tasks, officers-in-charge will be appointed to monitor the work carried out at the Ward, Zonal, and Regional levels.

Advertisers, advertising agencies, and other concerned parties are reminded that hoardings may only be installed after obtaining a proper license from the Corporation and in strict adherence to established rules and regulations. Hoardings for which only an application has been submitted—but for which no license has yet been granted—will also be considered unauthorized and will be removed.

All concerned parties are advised to verify the validity of their hoarding licenses and ensure full compliance with the applicable regulations. To avoid legal action by the Corporation, advertisers and agencies are urged to voluntarily remove any unauthorized hoardings.

The public and all stakeholders are requested to extend their full cooperation to this initiative, which is being undertaken by the Greater Chennai Corporation to curb unauthorized advertisements, ensure public safety, and preserve the aesthetic appeal of Chennai.

Issued by: Joint Director/Public Relations Officer.
Greater Chennai Corporation